விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 3 றவி ஆகிர் 20 இதழ் 3

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-2 82

# ரூ. 2,50,000 கடத்தல்! ரூ. 75,000 அபராதம்

(ஊர்காவற்றுறை)

கச்சதீவுக்கு அருகில நேற்று முன்தினம் கடற்படையினர், இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருள்களைக் கைப்பற்றினர்.

கச்சதீவு கடற்பகுதியில் ரோந்துசுற்றிய இலங்கை கடற்படையினரே இக்கடத்தலை முறியடித்தனர்.

கடற்படையினரால் படகு கைப்பற்றப்பட்டபோது பதினுறு பொதிகளில் கஸட். வாஞெலிகளும துணி வகைகளும் இருந்தன. கடத்தல் பொருள்களும் படகும் ஊர்காவற்றுறை சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டு, படகிலிருந்த ஐவரும் கைதுசெய்யப் பட்டனர்.

நேற்றுக் காலை விசாரணை நடத்திய யாழ். மாவட்ட உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன கடத்தல் பொருள்களையும் படகையும் பறிமுதல் செய்து, ஐந்து நபர்களுக்கும் எழுபத்தையாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

ஐவரில் ஒருவருக்குஐம்பதினுயிரம் ரூபாவும் இருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதமும், மற்றுமிருவருக்கு தலா இரண்டாயிரத்துஐநூறு ரூபா வீதமும் அபராதம் விதிக்கப் பட்டது.

★ குறிகாட்டுவான் இறங்குதுறைச் சம்பவம்:

# இராணுவவீரரின் துப்பாக்கிகள் 'கொள்ளை!

## 'மினிபஸ்' அநாதரவாகக் கண்டுபிடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் இறங்குதுறையில் நேற்று முன்தினம் நண்பகல் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், பலாலி இராணுவமுகாமில் கடமையாற்றிய கம்பளையைச் சேர்ந்த இராணுவ வீரர் அபயரத்தின பண்டா (வயது 30) பலியானுர். இயந்திரத்துப்பாக்கியுடன் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னர் இராணுவ ஜீப்பிலிருந்த இயந்திரத்துப்பாக்கி ஒன்றையும், இரண்டு எஸ். எல். ஆர். துப்பாக்கிகளையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு ஜீப்பில் வந்த இராணுவத்தினர் குடும்பத்தினரை நயினுதீவுக்கு வழியனுப்பிவிட்டு மூன்று இராணுவ வீரர்களும் இறங்குதுறையில் நின்றபோதே இச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

### ஜீப்பிலிருந்த சாரதி மீது சுட்டனர்

காலஞ்சென்ற பண்டா, ஜீப்பின சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்ததாகவும் மற்றும் இரு இராணுவவீரரும் துவக்குகளை ஜிப்பில் வைத்துவிட்டு இறங்குதுறையில் நின்று சில நிமிடங்களுக்குமுன் புறப்பட்ட படகைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அச் சமயம் திடீரெனத் தோன்றிய இரு இளைஞர்கள் இயத்திரத் துப்பாக்கியால் ஜீப்பிலிருந்த இராணுவ வீரரைப்பலதடவை சுட்டதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

### கடலில் குதித்து தப்பினராம்

துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தைக் கேட்டதும் இறங்குதுறையில் நிராயுதபாணிகளாக நின்ற மற்றும் இரு இராணுவ வீரர்களும் கடலில் குதித்து நீந்திச்சென்று படகில் ஏறிக்கொண்டு நயினுதீப சென்று, அங்கிருந்துகாரைநகர் போய் பின்னர் பலாலியைச சென்றடைந்தனர் என்று தெரியவருகிறது.

### மினிபஸ் மீதும் சுட்டனர்

இரு இளைஞர்களும் மிக வேகமாகச் செயல்பட்டு ஜீப்பிலிருந்த இராணுவத்தினரின் மூன்று துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு அங்கு நின்ற மினிபஸ்ஸில் ஏற முற்பட்டபோது மினிபஸ் சாரதி திரு. இராமச்சந்திரன் அவர்களை ஏற விடாமல் சாதுரியமாக மினிபஸ்ஸைச் செலுத்திஞர் என்றும் கூறப் படுகிறது.

உடனே இளைஞர்கள் மினிபஸ்ஸை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும், மினிபஸ் ஒருபக்கமாகப் போய் நின்றுவிட்டதாம்.

### மற்றுமொரு மினிபஸ்

பின்னர் அங்கு பிரயாணிகளுடன் வந்த 29 ஸ்ரீ 1752 இலக்க மினிபஸ்ஸைத் துப்பாக்கி முனையில் மறித்து பிரயாணிகளை இறக்கிவிட்டு சாரதி திரு. சிவராமலிங்கத்தை பஸ்ஸை செலுத்து மாறுபணித்து, அதில் துவக்குகளுடன் ஏறிச்சென்றதாகக் கூறப்படுகிறது. பின்னர்,

(8 பக்கம் பார்க்க)

## ஜீப்பின் டயருக்கு துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான இராணுவ வீரர் அபயரத்னபண்டாவின் இடது கன்னத்திலும் காதிலும் வலது நெஞ்சிலும் கையிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு ஜீப்பில் சடலம் கொண்டுவரப்பட்ட போது வீதியில் நின்று அநேகர் பார்வையிட்டனர்.

ஜீப்பின் முன்கண்ணுடி சேதமடைந்து நொறுங்கிக் காணப் பட்டது. இடதுபக்க முன் டயரும், பின்டயரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்தன.

ஜீப் கட்டி இழுத்து, யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டது. (உ)

## தீவுப்பகுதிகளில் பலத்த சோதனை

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் புங்குடுதீவு வேலணைப்பகுதிகளில் தொடர்ந்து நேற்றும் முப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மறித்து சோதனையிடப்பட்டன.

தீவுப்பகுதியில் உள்ள இறங்குதுறை யாவற்றிலும் பலத்த காவல்போடப்பட்டுள்ளது, கரையோரப்பகுதிகளில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகள் பலப் படுத்தப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட மினிபஸ் அநாதரவாக விடப்பட்டிருந்த சாட்டி பகுதிகளிலும், பலத்ததேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இப்பகுதிகளில் சனநடமாட்டம் காணப் படவில்லை.

நேற்றுமுன்தினம், நண்பகல்

(8ம் பக்கம் பார்க்க)

## வீடு வீடாகச் சோதனை!

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் குறிகாட்டுவான் இறங்குதுறையில் இராணுவவிரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து துப்பாக்கி இளைஞர்களைத் தேடி முப்படையினரும் தீவிர வேட்டையில் இறங்கியுள்ளனர்.

வடபகுதிக் கரையோரப் பகுதிகளில் ரோந்து பலப்படுத்தப்பட்டதுடன், சந்தேகத்துக் இடமான இடங்கள் பலத்த சோதனைக்குட்பட்டன.

நேற்று மாலை சுமார் நான்கு மணியளவில் பண்டத்தரிப்பு வடலியடைப்பு, பணிப்புலம் ஆகிய பகுதிகளில் வீடுவீடாக இராணுவத்தினர் சோதனை நடத்தினர்.

இராணுவத்தினரின் இத் திடீர்ச்சோதனையைத் தொடர்ந்து இப்பகுதிகளில் சுமார் ஒருமணிநேரம் பதட்டநிலை காணப்பட்டது.

# இராணுவ வீரரின் சடலம் விமானத்தில் அனுப்பப்பட்டது

## இன்று மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானில் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான இராணுவ வீரர் அபயரத்ன பண்டாரவின் சடலம் நேற்றுஇரவு விமான மூலம் அவரின் சொந்த ஊரான கம்பளைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதாவன் திரு, ரி. கே. என். திலகன், சடலத்தை இராணுவ லெப்டினன்ட் திஸநாயக்காவிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்.

யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் பிரேதபரிசோதனை நடை பெற்ற பின்னர் சடலம் இராணுவ லெப்டினன்ட் திஸநாயக்காவிடம் ஒப்படைக்கப் பட்டது. இராணு வீரர்கள் சடலத்தை கையேற்று விமானத்தில் அனுப்பிவைத்தனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இன்று பிற்பகல் 2மணிக்கு நீதவான் திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில்மரணவிசாரணைஆரம்பமாகும்,

ஊர்காவற்றுறை பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி இன்று தமது அறிக்கையை நீதவானிடம் சமர்ப்பிப்பார்.

## இலங்கை கிரிக்கட் கோஷ்டியின் அபார வெற்றி

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கட் கோஷ்டியினர் இங்கிலாந்துச் கோஷ்டிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் மிகவும் அபாரமாக ஆடி பிரமிக்கத்தக்க வகையில் வெற்றி அடைந்துள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட 45ஓவர் ஆட்டத்தின் 45வது ஓவரின்

(8ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

தாங்கள் மட்டும் பிழை செய்யாமல் இருந்தால் போதாது; பிறர் பிழை செய்வதற்கும் இடம் கொடுக்கக்கூடாது. — மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## ஆசிரியப் படை

வருகிற தேசிய புதுவருடத்துடன் ஐயாயிரம் புதிய ஆசிரியர்கள் மாவட்ட ஆசிரியசேவையில் நியமனம் பெறுகிறார்கள். இதற்கான எழுத்துப் பரீட்சை முடிவடைந்துவிட்டது. நேர்முகப் பரீட்சை முதலிய சம்பிரதாயங்களுக்குப் பின் நியமனம் பூர்த்தியாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது; நடந்தேறிய பின்னரே நிச்சயம்!

எமது பத்திரிகையில் ஆசியர் பற்றுக்குறையைப்பற்றி விமர்சித்த கட்டுரையாளர் இப்புதிய திட்டம் தானும் இன்று நிலவும் இப் பிரச்னைக்கு தீர்வுகாணமாட்டாதென்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார். ''யானைப் பசிக்கு சோளப் பொரி'' என்பதில் அவருடைய தீர்ப்பு சுருக்கப்பட்டிருக்கிறது.

நாம் 'ஆசிரியப் படை' பற்றி குறிப்பிடவிரும்பியது பற்றுக்குறைஎன்றகோணத்தில்அல்ல; ஐ.தே.க.(யானை) ஆட்சியில் எத்துறையிலும் பசியும், பற்றுக்குறையும் அதிகரித்து வருவதுகண்கூடு. அதேவேளையில் பொருளாதாரத் தட்டுப்பாடு அத்துடன் போட்டியிடும்போது சோளப்பொரிதான் கிடைப்பது பேரதிர்ஷ்டம்.

இராணுவப் படையினர் யாழ். குடாநாட்டில் எங்கும் காணப்படுவதும், அங்கும் இங்கும் 'மினி'ப் போரில் ஈடுபடுவதும் வேறொரு படையினரை நினைவூட்டக் காரணமாகவிருக்கலாம்; அஃதல்ல முக்கியம். கல்வியென்பது ஒரு மகத்தான போராட்டம். அறியாமை என்னும் மதம் நிறைந்த எதிரியை ஒழித்துக்கட்ட மேற்கொள்ளும் போர்.

அதற்கு உதவும் முதலாவது காலாட்படையே ஆரம்ப பாடசாலைகளும் அவற்றிற்குரிய ஆசிரியர்களும். இங்கு கடமையாற்றும் ஆசிரியர்களின் முக்கியத்துவம் பற்றி விளக்கத் தேவையில்லை; ஆனால் அது பற்றிப் பறைசாற்றும் அரசும், ஆசிரிய சங்கங்களும், அக்கூட்டத்தினரையே 'போடுதடி'களாக்கிவிடுகின்றனர். வேலி பயிரை மேயும் காட்சிபோலாகும்.

60,000 பேர் விண்ணப்பித்த, தற்போது நடைபெற்ற பரீட்சைக்கு முப்பத்தேளாயிரம் பேர் தகுதியானவராகக் கருதப்பட்டனா. எழுத்துப் பரீட்சை மூலமும், நேர்முகப்பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்படும் 5000 ஆசிரியர்கள் உண்மையில் தரமானவர்களாக வேண்டுமென்பதே எமது வாதம்.

தெரிவில், தவிர்க்க முடியாத குறைகள் இருப்பது தெரிந்ததே! ஆயினும் தேர்தல் ஆண்டில் தெரிவுசெய்யப்படுகிறவர்கள் எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்றவராலும், கட்சிக்காதரவான எம். பி. மாரின் கையாட்களானல் அவர்கள் ஆசிரிய படைக்குத் தகுதி பெற்றவர்கள், அவர்கள் ராணுவ 'கூலிப்படை'யினருககும், உதவுமோ என்பது சந்தேகம்!

ராணுவ வீரர்கள் நாட்டைக் காப்பாற்றும் (ஆட்சியையல்ல) பணியில் ஈடுபட்ட தேசிய 'வீரர்கள்'. அவர்களுக்கு உரித்தான திறமைகள் வேறு. தம்தேசமல்லாப் பிறதேசத்தில் சம்பளச் சிப்பந்திகள்போல் தொழில் புரியும் 'கூலிப் படையினர்' வேறுவிதத்தவர். அந்த இனத்தவரின் அந்தஸ்தை ஆசிரியர்கள் நாடுவது, நாட்டுக்கும், கல்விக்கும் பேராபத்தாகும் வெறும் உபதேசமல்ல, அனுபவத்தில் கண்ட சசப்பான உண்மை.

எங்களுக்குச் தெரியாதது ஒன்றுமே இல்லை என்ற 'திமிர்' பிடித்திருந்த கிரேக்கரைத் தட்டியெழுப்பிச் சிந்திக்க வைத்து, அதற்காக நஞ்சருந்தி உயிர்த்தியாகம் செய்தவர் கிரேக்க ஞானி சொக்கிறதர். மேனாட்டவரின் முதல் ஆசிரியப்பெருந்தகை அவர் 'எதனையும் நீயே சிந்தித்து முடிவுகட்டு' என்று மொழிந்த ஆசிரியர் அவர்.

கீழைத் தேசங்களுக்கு பகவத்கீதை காட்டும் அர்ச்சுனன் 'அசல்' மாணவன்; உண்மையைத்தேடிநிற்கும் அர்ச்சுனனுக்கு பாடஞ் சொன்ன ஆசிரியர் கண்ணபிரான். 'உன்னுடையை கண்ணுற்பார்' மனத்தால் சிந்தி, மனச்சாட்சியின் உதவியுடன் தீர்மானி' என்ற மகாவாக்கியத்தை போதித்தார்; மாணவனுக்கும் அகில உலகுக்கும்.

உலகனைத்துக்கும் என்றென்றும் நின்று நிலவும் இவ்விரு பேராசிரியர்களின் வாரிசுகளே ஆசிரியர்களெனப்படுவர்.

எப்பாடசாலைகளிலும், எந்தவகுப்பினையும், எந்தப் பாடத்தையும் கற்பிக்கும் பணியில் ஈடுபடும் 'படையினர்' எந்தக் கல்விக் கொள்கைகளும், வெள்ளைக் கடதாசிகளும் என்ன மாற்றங் கண்டாலும் எக்காலமும் மாறாத இந்த உபதேசத்தை மதித்துப் பணியாற்றும் திறமையும் தகைமையும் உடையவர்களாகவிருக்க வேண்டுமென்பது ஆசிரியப்படையின் இன்றியமையாத அம்சம்.

இக்கூட்டத்தினரை விண்ணுலகிலிருந்துதான் வரவழைக்கவேண்டுமென்று ஆசிரிய குழாமே கேலிபண்ணுங் காலகட்டத்தில் வாழ்கின்றோம்! அதனைப் புரியாமல் தலையங்கத்துக்கு மார் படிக்கிறோமென்று நினைப்பது தவறு.

தொழிலுக்குத் தயாராகும் கூட்டத்தினரையே நாம் தெளிவாகக் குறிப்பிடுகின்றோம். இந்தப் பல்லாயிரத்திலும், தகுதிவாய்ந்த ஐயாயிரத்தைத் தெரிவு செய்யுங்கள்! — திறமையென்ற அடிப்படையில் என்பது எமது வாதம்!

திறமைக்கு இலக்கணம் கூறுவதில், விவேகம், கல்வித்தகைமை, இதற்கு மேலாக மாணவ—ஆசிரிய தொடர்புக்குரிய விசேட பண்பு—இவற்றையே வற்புறுத்துகின்றோம். காலகதியில் இவை செவ்வனே வெளிப்படுவதால், தகுதியில்லாதவர் சேவையை விட்டுவிலக வழிசெய்யும் வகையில் நியமனங்கள் ஒரு கால எல்லைக்கு தற்காலிகமாகவே இருக்கவேண்டும்.

ஏதோ ஒரு உயிரினத்துககுரைத்த உபதேசம் போல் இது தோன்றலாம்; இருப்பினும இதனை இடித்துரைத்தலால் ஒரு பொல்லாப்புமில்லை.

## "சட்டத்துறையில் அமரர் ஜி.ஜி. மேதையாகத் திகழ்ந்தார்"

(சாவகச்சேரி)

''கடந்த அரை நூற்றாண்டு காலமாக தமிழ் பேசும் இனத்தின் தனிப்பெருந்தலைவனுகவிருந்து அரும்பணியாற்றிரயவர் அமரர் ஜி. ஜி. இவர் தமது ஆரம்பக் கல்வியைக் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற் கற்று உயர் கல்விக்காகிய புலமைப்பரிசில் பெற்று இங்கிலாந்து சென்று அங்குள்ள வெள்ளையர்கள் மத்தியில் முன்னணியிற் திகழ்ந்தவர்.

சாவகச்சேரியில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 5 வது சிரார்த்ததினத்தை முன்னிட்டு நடந்த கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய ஆசிரியமணி ஆர். ரீ. சுடபிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது சட்டத்துறையில் ஜி.ஜி. தென்கிழக்காசியாவிலே ஒரு மேதையாகத்திகழ்ந்தார். அவர் குரல் ஒலிக்காத நீதிமன்றமே இந்நாட்டில் இல்லை. நஞ்சனி மோட்டார்க்கார் வழக்கு டிரயல் அட்பார் வழக்கு, இந்தியாவில் கருணைநிதி மீதான கோதுமை ஊழல் வரை இவர் தோன்றி வாதிட்டார். வெற்றியும் கண்டார்.

இவர் சட்டத்துறையில் சக்கரவர்த்தியாக மிளிர்ந்தார். பள்ளி மாணவனுயிருக்கும் பொழுது சிறந்த பேச்சாளருக்கான தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டார் இங்கிருந்து ஐ. நாவுக்குச் சென்று சொற்பெருக்காற்றி, ஆங்கிலேயரையே பிரமிக்கவைத்தார். பொருளாதாரத்துறையில் தமிழினத்தின் பலம் பெருக வடக்கே சீமெந்துத் தொழிற்சாலை இரசாயனத் தொழிற்சாலைகளையும் கிழக்கே கடதாசித் தொழிற்சாலையையும் அமைத்தார். தமிழன் தன்மானத்தோடு வாழ்வதற்குப் பொருளாதார அபிவிருத்தி வேண்டுமெனக் கூறிய பொழுது அன்றைய எதிர்த்தவர்கள் இன்று அபிவிருத்திக்காக அரசினரை ஆதரிக்கின்றோம் என்று கூறுவதைக் கேட்கும் போது அவரது தீர்க்க தரிசனத்தைப் பாராட்டாமல் எவரும் இருக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் ஓர் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென வலியுறுத்தி அதை அமைக்கக் காரணகர்த்தாவாக விருந்தவர் அமரர் ஜி.ஜி. ஆவர்.

திரு. யோ. ஜெயக்குமார், திரு. அ ஆறுமுகம், ஆர். பரமேஸ்வரன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

## விளையாட்டு மைதானம்

சுன்னுகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்திருக்கும் 'யாழ். நாகேஸ்வரி வித்தியாசாலை' என்ற பாடசாலையிற் பாலர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை மாணவ மணிகள் கல்வி பயின்றுவருகின்றனர். ஆனல் இப்பாடசாலைக்கு நீண்ட காலமாக ஒரு விளையாட்டு மைதானம் இல்லாமை இப்பாடசாலையைப் பொறுத்தமட்டில் மிகப் பெருங் குறையாகவே இருந்துவருகின்றது இதுபற்றிப் பாடசாலை அதிபர் முன்னர் கல்வி அமைச்சிற்கும், தற்போது யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தும் பயன் இல்லை. பாடசாலைக்கு முன்னும், அருகிலும் தனியாரின் தரிசு நிலங்கள் சில இருக்கின்றன. ஆனல தற்போது

# மக்கள் கருத்து

முன்புறமிருந்த தரிசு நிலத்தில் வீடு கட்டுவதற்கு அத்திவாரம் இடப்பட்ட நிலையிலும், அருகிலுள்ள நிலத்தில் வீடுகட்டுவதற்குத் திட்டமும் இடப்பட்டுள்ளது. இவ்விரு நிலங்களையும் பாடசாலை பெற்றால்தான் விளையாட்டு மைதானம் சிறப்பாக அமையும்; எனினும் முன்னுள்ள காணியில் வீடு கட்டுவதற்கு அத்திவாரம் வளர்ந்த நிலையிலிருக்கின்றது. எனவே பாடசாலையின் இந்தப் பிரச்னையை கல்வியமைச்சாயினும், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையாயினும் தீர்த்துவைப்பார்களா? இதுவரை இப்பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகள் யாவும் அருகிலுள்ள தனியாரின் காணிகளிலேயே நடைபெற்றுவந்துள்ளன.

**பழைய மாணவன்**

சுன்னுகம்

### பாடவேளை அதிகரிக்கப்படுமா?

நுண்கலைப் பாடங்கள், உண்மையிலேயே கூடிய முயற்சியும், கூடிய கவனமும், கூடிய பாடவேளையும் கொண்டதாக அமையவேண்டும் என்பது யாவரும் உணரவேண்டியதொன்றாகும். காரணம் யாவும் செயல் முறைப் பாடங்கள் என்பதனுலேயே.

இருந்தபோதிலும் நுண்கலைப் பாடங்களுக்குக் கல்வி அமைச்சினுல் ஒதுக்கப்பட்ட பாடவேளைகள், கிழமைக்கு மூன்று மட்டுமேயாகும்!

மாணவர்களை ஒரு இயந்திரமாகக் கருதினுலும்கூட, மூன்று பாடவேளைகளில் இப்பாடங்களைத் திருப்திகரமாக அமுல்படுத்த முடியாதென்பது மறுக்கமுடியாததேயாகும்.

பதிலாகக்—கிழமையில்— ஒவ்வொரு வகுப்பிற்கும் 5 பாடங்கள் ஐந்து) ஒதுக்கப்படுமாக இருப்பின் ஓரளவு பொருத்தமாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்:

இக்கருத்துக்களை உணர்பவர்கள் மிகமிகச் சிலரே என்று கூறும்பொழுது யான் கவலைப்படுகின்றேன். இருந்தாலும் உரியவர்கள் உரிய அமைச்சுடன் தொடர்புகொண்டு ஆவன புரிவார்களா? பாடவேளை அதிகரிக்கப்படுமா?

-- எஸ். சிவஞானராஜ

அளவெட்டி

## நூறுவது வெள்யீடு

]சுழிபுரம்]

''நிலையக் குரல்'' வெளியீட்டை நடாத்திவரும் வழக்கம்பரை சனசமூக நிலயத்தினர் தமது நூறுவது வெளியீட்டை வெளியிட்டுள்ளனர். ஸ்ரீசிவாயசுப்பிரமணிய சுவாமி வருகை சம்பந்தமான தொகுப்பு நூறுவது வெளியீடாக அமைந்துள்ளது.

### ஓர் அன்பனின் கடிதம்

பொலிசாரால் அல்லது ராணுவத்தினுல் கைது செய்யப்படுகிறவர்களைக் குறிப்பிடும் போது பத்திரிகைகளில் ''பொலிஸ்பாதுகாப்பில் — ராணுவத்தின் பாதுகாப்பில்'' இருக்கிறார்கள் என்று எழுதப்படுகின்றது அல்லவா! இது சரியல்ல என்று எழுதுகிறார் வாசகர் ஒருவர்.

''பாதுகாப்பென்றல் இளைஞர்கள் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள் எனறல்லவா பொருள்படும்! ஆனல் நடப்பதென்ன?

''பொலிசாரின் கையில் — ராணுவத்தின் கையில் இருக்கிறார்கள் என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும்'' என்றார் அவர்.

### சுதந்திரத்தை வெறுத்தவர்

முன்னள் பிரதமர் அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சகோதரி திருமதி லிவேறா அம்மையார் 1948 ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு சற்று முன்பதாகவே நாட்டை விட்டு வெளியேறிச்சென்று லண்டனில் வாழ்ந்து வந்தார் அண்மையில் காலமான இந்த அம்மையாரின் விசித்திரமான வாழ்க்கையை மையமாக வைத்து திரைப்படம் ஒன்றை எடுககப்போகின்றதாம் பிரிட்டிஷ் சினிமாகம்பனியொன்று. இந்த அம்மையார் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கப் போகிறது என்று அறிந்ததும் அது சகிக்காமலே நாட்டைவிட்டு வெளியேறினராம். உள்ளூர் வாசிகளால் ஆளப்படுவதை அவர் அவ்வளவுதூரம் வெறுத்துள்ளார்

சுதந்திரம் கிடைத்த பின் நாடு எந்த லட்சணத்தில் இருக்கும் என்பதை அவர் அப்போதே உணர்ந்திருந்தார் போலிருக்கிறது. இத்தனைக்கும் இந்த நாட்டின் விடுதலைக்காகப்பாடுபட்ட விடுதலைவீரர் ஒருவரின் சகோதரி.

### நவீன பாஞ்சாலி

எலிஸபெத்டெய்லர் அமெரிக்காவின் புகழ்பெற்ற நடிகை 'கிளியோபாட்ரு' என்ற திரைப்படத்தில் நடித்த இவரது அழகில் மயங்கிய பல பெரும்புள்ளிகள் அவருக்குப் பின்னுலேயே தவம் புரிந்தார்களாம். சரித்திரகால களியோபாட்ருவும் கூட இவரது அழகுக்கு ஈடாக மாட்டார் என்று பேசிக்கொண்டார்கள்.

இந்த அம்மையார் ஆறு தடவைகள் திருமணம் புரிந்து கொண்டார். நிக்கார்ட்பேர்ட்டன் என்ற நடிகரை இரு தடவை மணந்து கொண்டார். அதனுல் ஐந்து வெவ்வேறு மனிதர்களுடன் வாழ்ந்துள்ளார். கடைசியாக மணமுடித்துக்கொண்ட செனட்டர் கோன்வார்ணர் என்பவரையும் அண்மையில் விவாகரத்து செய்து கொண்டு மிஸ் டெய்லர் ஆகிவிட்டார்.

### அந்தக்கட்டுரை

''ஆர்த்ராதரிசனமும் விஞ்ஞானமும்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது அல்லவா. இதை எழுதியவ நவரத்தினம் யார் என்பது பலருக்குத்தெரியாது. எளிய அழகிய தமிழ்நடையில் ஆழமான கருத்துக்கள் கொண்ட இககட்டுரையை எழுதியவர் சுயாட்சிக்கழகத்தலைவரும்முன்னாள் திவுப்பகுதிகள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. நவரத்தினம் தான் என்று அறிந்த வாசகர் சிலர் ஆச்சரிய முற்றனர். தொடர்ந்தும் அவர் இவ்வாறுன கட்டுரைகளை எழுத வேண்டும்.

-- 'பேனு'

# மதுரை - திருச்செந்தூர் நடைப்பயணத்தை கருணாநிதி கைவிட வேண்டும்

## எம். ஜி. ஆர். வேண்டுகோள்

சென்னை, பெப். 14

மதுரையிலிருந்து திருச்செந்தூர்வரை தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தமது தொண்டர்களுடன் நாளை திங்கட்கிழமை நடத்த இருந்த நீண்ட நடைப்பயணத்தைக் கைவிடுமாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருச்செந்தூர் ஆலயதர்மகர்த்தா சுப்பிரமணியம் கொலை தொடர்பாக விசாரணைசெய்த போல் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் உடன் விசாரணை நடத்துமாறு கோரியே திரு. கருணாநிதி நடைப்பயணத்தை மேற்கொள்ள இருந்தார்.

தி. மு. க. வின் கோரிக்கையின் பேரில் போல் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா கொலைமீதான விசாரணை நடத்த அரசு முன்வந்துள்ளது. எனவே நடைப்பயணத்திற்கு எதுவித அவசியமும் இல்லை என்றும் தெரிவித்த திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் திரு. கருணாநிதி தமது நடைப்பயணத் திட்டத்தை கைவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

## பயிற்சி வகுப்பு

[சாவகச்சேரி]

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த இரண்டு மாதங்கட்கு மேலாகச் சாவகச்சேரி கல்வி மூலவள நிலைய ஆதரவில் நடைபெற்றுவந்த பொது அறிவு, பொது உளச்சார்பு பயிற்சி வகுப்பு பூர்த்தியடைந்துவிட்டது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா தலைமையில் நடந்த இப் பயிற்சி வகுப்பில் சாவகச்சேரி எப்.பி. திரு. வி. என். நவரத்தினம் உரை

(4ம் பக்கம் பார்க்க)

## எந்த ஒரு நாட்டின் மீதும் பாரதம் தாக்குதல் நடத்தாது

### இந்திரா காந்தி கூறுகிறார்

புதுடில்லி, பெப்.14

இந்தியா இதுவரை எந்த ஒரு நாட்டின் மீதும் அவசியமின்றி தாக்குதல் நடத்தியது கிடையாது. இனிமேலும் நடத்தமாட்டாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

மகராஷ்டிர மாநிலத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

பல தொகுதிகளில் விரைவில் இடைத்தேர்தல்கள் நடைபெற உள்ளதாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதில் எதுவித உண்மையும் இல்லை. எந்தத் தொகுதியிலும் இடைத்தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு அவசியம் ஏற்படும் பட்சத்தில் நாம்நிச்சயம் தேர்தல் நடத்துவோம் என்றும் திருமதி காந்தி தெரிவித்தார். (இ

## இந்து சமயத்துக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் விவேகானந்த ”

[புலோலி]

“இந்து சமயத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் சுவாமி விவேகானந்தர். இந்து சமய மரபின் தொன்மை, இச்சமயம் ஒரு சமயம் மட்டுமல்ல; தத்துவமும் கலாச்சார பண்பாட்டு மரபும் கூட என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.”

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில்நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் விழாவிலே உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

“சுவாமி விவேகானந்தர் ஒரு போர் வீரன், சங்கீதப் பிரியன், நாட்டுப்பற்றுள்ள துறவி. இவர் பாரதநாட்டுக்கு மட்டுமல்ல உலக மக்களின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

“பாரதம் கண்ட மூவரில் ஸ்ரீராம கிருஷ்ணர் அறத்தை நிலைநாட்டினர். அன்னை சாரதா தேவி அன்புமுரசாகத் திகழ்ந்தார். சுவாமி விவேகானந்தர் வீரமுரசைப் பறையறைவித்தார்.

“ஏழைகளிடத்தில் கடவுளைக் காணலாம். ஏழைகளுக்காக வசதியற்றவர்களுக்காக மனம் இரங்கிச் சேவை புரிதல் சிவபூசைக்குச் சமம் என்பது சுவாமியின் கருத்தாகும்.

“ஒரு நாடு வளம்பெற சந்நியாசிகள் திருக்கூட்டம்பெருக வேண்டும். மக்களின் எதிர்காலம் வளம்பெற நாட்டில் துறவும் சேவையும் ஓங்கவேண்டும். ஒரு துறவி தான்வாழும் சமூகத்தில் அரும்பணியாற்ற வேண்டும்: அப்பணி மூலம் துறவியினுடைய மோட்சம் கைகூடும். துறவின் மேன்மையையும், துறவு எதிர்காலத்தில் எவ்வாறு மிளிரவேண்டும் என்பதையும் தாமே அவ்வழி நின்று ஒழுக்கிக்காட்டியுள்ளார் சுவாமி விவேகானந்தர். நாமும் அவ்வழி நின்றொழுக வேண்டும்”

யாழ். மருத்துவக் கல்லூரி மாணவி செல்வி சந்திரகௌரி குமாரவேலு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

“சமயத்தால், இனத்தால், நிறத்தால், மொழியால் வேறுபட்ட மக்கள் யாவரும் இறைவனது குழந்தைகள் என்பது விவேகானந்தரின் நெறியாகும். சுவாமி விவேகானந்தரின் அஞ்சாமையும், தன்னம்பிக்கையும், வீரதீரமும் அறிவாற்றலும் நிறைந்த உலகினைக்காண விழைந்தார். பக்தியும், சேவையும், தூய்மையுமே வாழ்க்கையின் இலட்சியங்கள். அவையே சமயத்தின் சிறந்த பண்புகள் என வலியுறுத்தினர். அவரது வாழ்க்கைமுறைகளைப் பின்பற்றிநாமும்வாழ வண்டும்.”

மேலைப் புலோலி மாதர் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன், சேவாச்சிரம பொதுச்செயலாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## திருமலை தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி

### ஆசிரியர்சங்க செயலாளர் மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூன்ருவது அங்கத்துவ பலம் கொண்ட மாவட்டமாக திருகோணமலை விளங்குகின்றது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

கடந்த சில தினங்கள் திரு. மகாசிவம் தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்காவுடன் தங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பாக திருகோணமலை, கிண்ணியா பகுதிகளுக்கு விஜயம் செய்து கிளைகளை புனரமைப்பு செய்தனர்.

இதன்பின்பு பத்திரிகையாயாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் திரு. மகாசிவம் கூறியதாவது:

திருகோணமலையிலுள்ள தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் தற்போது விழிப்புணர்ச்சியையும், புதிய உத்வேகத்தையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது இவை எல்லாம் திருமலை மாவட்டத்திலுள்ள தமிழ் மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கு நல்ல அறிகுறியாகவே அமைகின்றது. அதே நேரத்தில் திருமலை மாவட்ட அமைப்புக் கூட்டமும் விரைவில் கூட இருக்கிறது.

திருகோணமலை கிளையின் புதிய உறுப்பினர் விபரம்:

தலைவர்; திரு. கைடி பொன்கலன் செயலாளர்; திரு. வ. தங்கவேல் பொருளாளர்: திரு. நா. இராஜநாதன்.

கிண்ணியா கிளை உறுப்பினர் விபரம்:

தலைவர்; திரு. சி. கணேசபிள்ளை செயலாளர்: திரு. ச. அளானந்தம் பொருளாளர்: திரு. கு. திலகரட்ணம். [உ]

## கேதீஸ்வரத்தில் சிவராத்திரி தினம்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி, வழமைபோல் திருக்கேதீஸ்வரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது

திருக்கேதீஸ்வரம் வரும் அடியார்களுக்கு அன்னதானம் 20ம், 21ம், 22ம் திகதிகளில் சிவராத்திரிமடம், கதிர்காம மடம், திருஞானசம்பந்தர் மடம் ஆகியவற்றில் வழங்கப்படும்.

கொழும்பிலிருந்து வரும் அடியார்களுக்கு 20ம், 21ம், 22ம் திகதிகளில் விசேட ரயில் சேவையுடன் ஆசனங்களை முன் கூட்டிப் பதிவு செய்யக் கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதோடு; மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மலையகம் உட்பட தூர இடங்களிலிருந்து விசேட பஸ் சேவையும், கேரதீவு வழியாக விசேட படகுச் சேவையும் திருக்கேதீஸ்வர தேவஸ்தான திருப்பணி சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுகாதாரம், குடிநீர் பாதுகாப்பு உட்பட சகல வசதிகளையும் திருப்பனந்தாள் ஓதுவார் திரு. என். முத்துக் கந்தசாமி மேற்கொண்டு வருகின்றார்.

நான்கு சாமப் பூசையும் வழமைபோல் வானொலியில் நேர்முக அஞ்சல் செய்யப்படும். பூசைக் கிரியைகளை செய்ய தமிழ்நாடு திருக்கோலக்காவிலிருந்து திரு என். ராமநாத சிவாச்சாரியார் வருகை தருகின்ருர். (உ)

## “சக்தியை வழிபட்டால் நல்வாழ்வு கிடைக்கும்”

(புலோலி)

“வீரம் என்பது சக்தியின் ஒரு அங்கமாகும். எனவே நாம் சக்தியை வழிபட்டு வீரத்தைப் பெற்று நல்வாழ்வு வாழவேண்டும்”

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக வைபவத்திலே உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே, எஸ். மகேசன் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றிய நீதவான் திரு மகேசன் குறிப்பிட்டதாவது:

ஆதிகால மன்னர்கள் சக்தியையே முன்வைத்து கோவில்களை நிறுவி கல்லை ஒரு மையமாக வைத்து இறைவனை வழிபட்டனர்.

இல்லறத்தில் ஈடுபடுவதற்கும், பொருள்களை ஈட்டுவதற்கும், வாழ்க்கையில் வெற்றியை ஈட்டிக்கொள்வதற்கும் துக்கத்தைத் தாங்கிக் கொள்வதற்கும் வீரம் வேண்டும்.

பண்டைத் தமிழர்கள் வீரத்தை எடுத்துக்காட்டுவதற்கு பல அரிய சாதனைகள் மேற்கொண்டார்கள். வீரம் சக்தியின் ஒரு அங்கமாகும். சக்தியை பத்திரகாளி, துர்க்கை, மாகாளி சாமுண்டீஸ்வரி, என்றெல்லாம் அழைக்கலாம்.

நாம் வீரத்துடன் ... பக்தி சிரத்தையுடன் ... யாக இறைவனை ... வேண்டும். தமிழ் ம... டகளுக்கு கொடை ... இக்கொடை ... லேயே கோவில்கள் ... கின்றன

[illegible]

CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் ரொபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,
4, உளுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

### கோப்பாய் கலாசாலை மன்றங்களுக்கு

# வசதிக்கட்டணத்திலிருந்து இவ்வருடத்திற்கு ரூ. 24,000

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இவ்வருடம் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களைக் கல்லூரி அமைச்சரவையிலும், அங்கு இயங்குகின்ற பாடத்தோடு சம்பந்தப்பட்ட மன்றங்களிலும் முக்கிய பதவி வகிப்பது தொடர்பான கூட்டம் கல்லூரி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பொது நிருவாக அமைச்சர், சுகாதார அமைச்சர், போக்குவரத்து அமைச்சர், மின்சக்தி அமைச்சர், விவசாய அமைச்சர் உட்படச் சமூகவியல், இந்துசமயம், கிறிஸ்து சமயம் நுண்கலை, மனையியல், விளையாட்டு ஆகிய மன்றங்களுக்கான பிரதிநிதிகளும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க இவ்வருடம் வசதிக்கட்டணத்திலிருந்து சுமார் 24 ஆயிரம் ரூபாய் விளையாட்டுத்துறை, முத்தமிழ் மன்றம், இந்துமா மன்றம் போன்ற மன்றங்கள் உட்பட மனையியல் உபகரணம், வாசிகசாலை போன்ற சகல தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

இந்தச் செலவினங்கள் பற்றிய விபரங்களைக் கல்லூரி முதல்வர் திருமதி இ, ஆனந்த குமாரசுவாமி பாடநெறிப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் அறிவித்துள்ளார்.

அடுத்த தவணையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெறவிருப்பதால் ஆரம்ப வருட ஆசிரிய மாணவர்கள் மூன்று இல்லங்களுக்கும் பிரிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

---

## 'சங்காரம்' கிராமத்துக்குச் செல்கிறது

[யாழ்ப்பாணம்]

யாழ் நாடக அரங்கக் கல்லூரி மௌனகுருவின் சங்காரத்தை பல வருட இடைவெளிக்குப்பின் மீண்டும் தயாரித்து பல இடங்களில் மேடையேற்றி வருகிறது. யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ். திறந்த வெளியரங்கு, பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு ரவர் மண்டபம் முதலிய மேடைகளைத் தரிசித்த 'சங்காரம்' வரும் சனி 20ம் திகதி மாலை இளவாலையில் மேடையேறுகிறது.

கூத்து வடிவத்தை நவீன நாடகத்தில் புகுத்தியதால் வரலாற்றுப் புருஷராக உயர்ந்த மௌனகுரு தனது பிரதியை நெறியாள்வதுடன் தானே தொழிலாளர் தலைவனாகவும் தோன்றி ரசிகர்களின் பாராட்டையும் பெறுகிறார்.

யாழ். நாடக அரங்கக் கல்லூரியின் பல சிறந்த கலைஞர்களை ஒரே மேடையில் சந்திப்பதுடன் கண்ணனின் இசையை ஒருங்கே இரசிப்பதற்கும் 'சங்காரம்' வகைசெய்கிறது.

---

## அனாதரவாக நின்ற சிறுமி

(புலோலி)

அனாதரவான நிலையில்நின்ற ஒன்பது வயதுடைய வேலைக்காரச் சிறுமியை கைதடி இரட்சணிய சேனையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை பத்திரகாளி கோவில் ஒழுங்கையை சேர்ந்த முருகுப்பிள்ளை தணிகாசலம் என்பவர் அனாதரவாகத் திரிந்த ஒன்பது வயதுச் சிறுமியைப் பருத்தித்துறை பொலிசில் ஒப்படைத்தார். பொலிசாரின் விசாரணையிலிருந்து இச் சிறுமி கண்டியைச்சேர்ந்தவரென்றும் இவரது பெயர் கமலா என்பதும் தெரியவந்தது. ஆனால் இச் சிறுமி யார் வீட்டில் வேலை செய்துவந்தார் என்பது தெரியவில்லை.

பொலிசார் இச் சிறுமியை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதவான் இச் சிறுமியின் பெற்றோர்கள் பற்றிய விபரம் தெரியாத படியினால் சிறுமியைக் கைதடி இரட்சனிய சேனையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

---

### சக்தியை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லுமே உருப் பெற்றுள்ளது. சிறந்த பண்புகளில் தியானமும், துறவறமும் முதன்மை பெறுகின்றது. தியானத்தினாலே துறவறம் மேற்கொள்ளலாம். யாகத்தின் மூலம் சக்தியின் உதவியால் பல அரிய சாதனைகளைச் சாதிக்கலாம்.

---


## விவசாயிகளுக்கு விசேட கடன் வசதி

1. எம்முடன் பண முதலீடு செய்யும் விவசாயிகளுக்கு அதிக வட்டி கொடுப்பதுடன் குறுகிய காலக் கடன் வசதி நியாயமான வட்டியில் வழங்கப்படும்.
2. முதலீட்டுப்பணத்தில் ஒரு பகுதியைத் தேவையேற்படும்போது கடனாகப் பெற்றுக்கொள்ளலாம்.
3. உங்கள் பெரும்போக வருமானத்தில் ஒரு பகுதியை உடனடியாக முதலீடு செய்து தேவையான காலத்தில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

எமது ஸ்தாபனத்தின் 25 வருட உறுதிமிகு சேவையின் பயனாக

**இந்தப் புதிய திட்டம் முதன் முதலாக யாழ்ப்பாணப்பகுதியில் செயற்படுத்தப்படுகின்றது.**

**இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.**

எமது ஸ்தாபனத்தின் பொருளாதார நிலை பற்றிய தகவல், கடன் வசதி பற்றிய விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:—

# த சென்றல் பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்

250, கே. கே. எஸ். வீதி, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம்.

தொலைபேசி 8360

தலைமை அலுவலகம்: 24, தலாதா வீதி, கண்டி. தொலைபேசி: 4098

கிளை அலுவலகம்: 221/5, தர்மபால மாவத்த, கொழும்பு. தொலைபேசி: 93792



நீங்கள் ஒரு கராஜ் சொந்தக்காரராகவோ அல்லது புதிய, புதுப்பிக்கப்பட்ட வாகனத்தின் இறக்குமதியாளராகவோ இருப்பின் எமது காரியாலயத்தில் "முகவராக"ச் சேர்ந்து மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நாம் பிரதானமாக கீழ்க்கண்ட இடங்களில் வசிப்பவர்களையே முகவர்களாக விரும்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கானை | கிளிநொச்சி |
| அச்சுவேலி | வட்டுக்கோட்டை | வவுனியா |
| புத்தூர் | காரைநகர் | மன்னார் |
| வல்வெட்டித்துறை | கொடிகாமம் | முல்லைத்தீவு |
| காங்கேசன்துறை | சாவகச்சேரி | |

மேலும் விபரங்களுக்கு கடிதமூலமாகவோ அல்லது நேரில் வந்தோ என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை முகாமையாளர்,

## த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


---

# உலகம் சுற்றிய சித்தன்கேணி கடிதம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தன்கேணி என்ற கிராமம் எங்கு இருக்கிறதுஎன இலங்கையிலுள்ள அநேகருக்கு — ஏன் யாழ். மாவட்டத்திலுள்ள பலருக்கே தெரியாமலிருக்கலாம். சித்தன்கேணி என்றொரு கிராமம் எங்காவது இருக்கிறதா என்றுகூட நம் நாட்டவரில் சிலர் கேட்கலாம்.

இந்நிலையில் லெபனான் நாட்டிலிருந்து சித்தன்கேணிக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்று விலாசதாரருக்கு கிடைத்துள்ளது என்றால் இது ஒரு அதிசயம் அல்லவா?

சுழிபுரம்— பண்ணாகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பத்மநாதன் என்பவர் சித்தன்கேணியிலுள்ள தமது நண்பருக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் 28ம் திகதியிடப்பட்ட கடிதத்தை அஞ்சல்செய்துள்ளார். அக்கடிதம் 2 மாதங்களுக்குப்பின் கடந்த மாதம் 28ம் திகதி விலாசதாரரை வந்தடைந்துள்ளது.

அக்கடிதத்தில் விலாசதாரரின் பெயர், வீட்டுப் பெயருடன் Sithankerney N. P. என்றே எழுதப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் என்றோ, இலங்கை என்றோ அந்த முகவரியில் எழுதப்பட்டிருக்கவில்லை.

உலகின் பலநாடுகளுக்குச் சென்ற இக்கடிதம் இறுதியில் இந்தியாவில் உள்ள 'சீத்தன் ஜெறி' (Seethanjeri) கிராமத்திற்கு வந்துசேர்ந்து அங்கு வைத்து Ceylon என்று ஆங்கிலத்திலும் இலங்கை என்று தமிழிலும் முகவரியுடன் சேர்த்து எழுதப்பட்டு உரிய விலாசதாரரை வந்தடைந்துள்ளதை அக்கடிதத்தின் கவரில் அடிக்கப்பட்டுள்ள திகதி முத்திரைகள் எடுத்துக்காட்டுகின்றன.

எமது நாட்டிலோ...

### ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சதிசெய்கின்றதா?

யாழ்ப்பாணத்தில் உபவானொலி நிலையம் அமைத்து மத்திய அலைவரிசையில் வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவது யாழ். மக்கள்— குறிப்பாகத் தமிழ்மக்கள் பயனடைவதற்காகவே.

நேற்றும், நேற்று முன்தினமும் கொழும்பில் நடைபெற்ற இங்கிலாந்து—இலங்கை கிரிக்கட் கோஷ்டிகளுக்கிடையிலான ஒரு நாள் ஆட்டங்களின் நேர்முக வர்ணனை வானொலியில் நடைபெற்றபோது மேற்சொன்ன நல்நோக்கம் சிதறடிக்கப்பட்டது.

யாழ். கிரிக்கட் ரசிகர்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் ஆட்டங்களின் சிங்கள மொழியிலான நேர்முக வர்ணனையே காலை முதல் பகல் வரை மண்டைதீவு அலை வரிசையில் இருநாட்களும் ஒலிபரப்பப்பட்டது.

இச்செயல்மூலம் யாழ். தமிழ் ரசிகர்களை மிகவும் சிரமத்துக்கு மத்தியில்இரைச்சலுடன் கூடிய சிற்றலை வரிசையில் ஒலிபரப்பப்பட்ட ஆங்கில நேர்முக வர்ணனையை கேட்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கிவிட்டது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

தமிழ் மக்களுக்கு எதிராக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சதிசெய்கின்றதா? தொலைக்காட்சி நேயர்களுக்கும் அதே கதிதான்.

எமது வீரர்கள் பலம்பொருந்திய இங்கிலாந்து கோஷ்டியுடன் மோதும் ஆட்டத்தை தொலைக்காட்சியில் காணும் ஆவலுடன் தொலைக்காட்சிப் பெட்டியை அணுகியவர்களுக்கும் ஏமாற்றம் அளிக்கக்கூடிய விதத்தில் அதன் வர்ணனையும் சிங்களமொழியிலேயே ஒலிபரப்பப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான வீடுகள், கடைகள், நிறுவனங்களில் எல்லாம் இந்த நேர்முகவர்ணனையை இப்போது வானொலியில் கேட்கக்கூடியதாக இருக்கிறது

வீடுகளிலும் வீதிகளில் தொலைக்காட்சி இருக்கும் இடங்களிலும் கிரிக்கட் ரசிகர்கள் தொலைக்காட்சிப் பெட்டியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

எனினும் சிங்களம் தெரியாத தமிழ் ரசிகர்களின் பாடு திண்டாட்டம்தான்.

தமிழ்மொழிக்கு அரசியல் அந்தஸ்து— தமிழ்மொழி அமுலாக்கலுக்கு தனியான அமைச்சு—ஆனால் தமிழ்மக்களுக்கு ......?

### கிரிக்கட் பைத்தியம்

கிரிக்கட் பைத்தியம் இன்று கிழவர் முதல் இளசுகள்வரை பீடித்துள்ளது.

கொழும்பில் இரு வாலிபர்களுக்கு அந்தப் பைத்தியம் படுமோசமாகியதன் விளைவு கிரிக்கட் ஆட்டத்துக்கான டிக்கட்டுகளை விற்பனை செய்துகொண்டிருந்த இருவர்மீது மிளகாய்த்தூள் வீசப்பட்டு இரு டிக்கட் புத்தகங்கள் பறிக்கப்பட்டன.

டிக்கட் விற்பவர்களிடம் வந்த இருவரில் ஒருவர் பணத்தை நீட்டிக்கொண்டே டிக்கட் கேட்டாராம். அங்கு வந்த மற்றொருவர் டிக்கட் விற்றவர்களின் முகங்களில் மிளகாய்த்தூளை வீச இருவரும் சேர்ந்து 2 டிக்கட் புத்தகங்களைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டனராம்.

குறிப்பிட்ட அந்த இரண்டு டிக்கட் புத்தகங்களும் செல்லுபடியற்றதாக்கப்படும். என்பதை அந்த வாலிபர்கள் ஏனோ அறிந்திருக்கவில்லை.

-- "ஆர்க்கே"

---

## தொழில்நுட்ப பயிற்சிவகுப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் மேசன் தொழில் நுட்பபயிற்சிவகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்வியமைச்சின் புறவழிக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் தொழில் நுட்பவகுப்புகளை இக்கல்லூரியிலும் நடத்த வேண்டுமென விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து தற்போது மேசன் பயிற்சி வகுப்பை முதலில் ஆரம்பிக்க அனுமதி கிடைத்து அதற்குத் தேவையான உபகரணங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

கல்லூரியைவிட்டு விலகிய மாணவர்களும் இத்துறையில் ஆர்வமுடையவர்களும் இவ்வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற முடியுமெனவும் பயிற்சி முடிவில் பரீட்சை மூலம் தராதரப்பத்திரம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

---

### பயிற்சி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றுகையில் கூறியதாவது:

"கடந்த 2 மாத காலமாக எதுவித பிரதியுபகாரமும் கருதாது பல சிறந்த ஆசிரியர்கள் உங்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். இந்த வகுப்புக்களை ஒழுங்கு செய்த கல்வி மூலவள நிலையத்தை நாம் மனதாரப் பாராட்ட வேண்டும்.

"இலவசமாக இந்த வகுப்பு நடைபெற்றதுபோல வாழ்க்கையில் நீங்கள் முன்னேறி உதவ வேண்டும்" என்றார்.

# மாணவிகளுக்கான பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

பாடசாலையிலிருந்து விலகிய மாணவிகளுக்கான தொழிற் பயிற்சி வகுப்புகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது.

பனம் பொருள் உற்பத்தி, உடை தயாரித்தல், அச்சடித்தல் போன்ற பல தொழிற் பயிற்சிகள் நடைபெறவிருப்பதாகவும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புகளை இந்த யுவதிகள் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தெரிவித்தார். (இ)

# யாழ்ப்பாணத்தில் 'பாஸ்போர்ட்' அலுவலகம்

## மார்ச் 1 முதல் பெறலாம்

(கொழும்பு)

மேற்காசிய நாடுகளில் வேலை வாய்ப்பை எதிர்நோக்கியுள்ள வட பகுதி இளைஞர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து 'பாஸ்போர்ட்' விநியோகிக்கப்பட இருக்கிறது. அடுத்த மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் 'பாஸ்போர்ட்' விநியோகிக்கப்பட இருக்கிறது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பணிப்பின் பேரில் இதற்கான நடவடிக்கைகளை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

கடவுச்சீட்டு வழங்குவதை பன்முகப்படுத்துவதின் மூலம் கொழும்பிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை குறைக்க முடியுமென அரசாங்கம் கருதுகிறது.

தற்போ˝ இத்திணைக்களத்திற்கு தினமும் 1,000 கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பங்கள் கிடைத்து வருகிறது.

கண்டி, காலி ஆகிய இடங்களிலும் மார்ச் மாதம் முதல் 'பாஸ்போர்ட்' விநியோகம் செய்யப்படவிருக்கிறது.

# கிராமிய வங்கியில்

## ஆயுதமுனையில் கொள்ளை!

(வெலிகாமம்)

பயங்கர ஆயுதங்கள் சகிதம் வங்கியொன்றிற்குள் நுழைந்த கொள்ளைக்காரர்கள், துப்பாக்கி முனையில் வங்கி முகாமையாளரையும், அங்கு பணிபுரிந்த இரு ஊழியர்களையும் பயமுறுத்தி பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பெலியத்தை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இஹல பெலியத்த கிராமிய வங்கியிலேயே இக்கொள்ளை இடம் பெற்றது.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் 2,400 ரூபாவாகும். நகைகளின் பெறுமதி 7,500 ரூபா.

இதுதொடர்பாக சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஐந்து பேரை பொலிசார் தேடிவருகின்றனர். (வெ)

## புதிய அதிபர்

(சரவணை)

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. கு. கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர் வித்தியாலயமின் இணைப்பு வேலைகளை தமது செலவில் செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்று மேடையேறும் இரு நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

ஆராய்ச்சி நூல்களையும் அறிவு நூல்களையும் கடந்த ஐந்து ஆண்டுகளாக வெளியிட்டு வரும் முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் தனது வெளியீடுகளுக்கு உதவியாக இன்று திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இரு நாடகங்களை மேடையேற்றுகிறது.

பாடசாலைச் சிறுவர்களுக்கான 'கூடி விளையாடு பாப்பா' என்ற நாடகம் இன்று பிற்பகல் மேடையேறும். இந்நிகழ்ச்சிக்கு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றுவார்.

வளர்ந்தோர்க்கான நிகழ்ச்சியாக மாலையில் 'பொறுத்தது போதும்' என்ற நாடகம் இடம்பெறும். வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

## கிறிஸ்தவ மாநாடு

(அரியாலை)

யாழ் பல்கலைக்கழகத்திலும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும், கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்புகளிலும் கல்வி கற்கும் கிறிஸ்தவ மாணவர்களுக்கான மகாநாடும், ஞான ஒடுக்கமும் பெப்ரவரி 19ந் திகதி முதல் 21ந் திகதி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது,

வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறும் ஆரம்ப ஆராதனையில் தென்னிந்திய திருச்சபையின் யாழ் மறைமாவட்ட பேராயர் பேரருட் திரு டி. யே. அம்பலவாணர் ஆண்டகை அருளுரை நிகழ்த்துவார்.

சனிக்கிழமை நடைபெறும் மகாநாட்டில் திரு. சூரி வில்லியமும், திரு. சீலன் கதிர்காமரும் விரிவுரை நிகழ்த்துவார்கள். திருமறைப் படிப்பை அருட்திரு டி. ஆர். அம்பலவாணர் அடிகளார் நடாத்துவார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை பேராலயத்தில் நடைபெறும் ஆராதனையை அருட்திரு எஸ். என். சுகுணனந்தன அடிகளார் ஒப்புக்கொடுப்பார்கள்.

YAMAHA

விரையுங்கள்!

விலை ஏறுமுன் இப்போதே வாங்குங்கள் ஒரு

யமஹா

மோட்டார் சைக்கிள்!

சலுகை விலை, மார்ச் 14 வரை மட்டுமே!

| மாடல் | தற்போதய விலை | 15-3-82 முதல்! அதிகரித்த விலை |
|---|---|---|
| யமஹா V 80 | ரூ. 12,800/- | ரூ. 13,900/- |
| யமஹா YB 80Y | ரூ. 13,750/- | ரூ. 14,400/- |
| யமஹா DX 100 | ரூ. 14,000/- | ரூ. 15,500/- |
| யமஹா DT 100X | ரூ. 18,200/- | ரூ. 19,900/- |
| யமஹா RX 115 | ரூ. 20,500/- | ரூ. 21,400/- |
| யமஹா RS 125E | ரூ. 18,900/- | ரூ. 19,700/- |
| யமஹா DT 175 | ரூ. 23,000/- | ரூ. 24,900/- |
| யமஹா X" 250 | ரூ. 28,400/- | ரூ. 28,950/- |
| யமஹா RD 350LC | ரூ. 37,000/- | ரூ. 39,000/- |

உதிரிப்பாகங்கள் ஏராளம்

விற்பனையின் பின் தனித்துவமான பராமரிப்புச் சேவை
த பிறுன்ஸ் கம்பெனி லிமிட்டெட் ஊடாக
நாடு முழுதும் பிறுன்ஸ் வசதியுண்டு.

உத்தரவுபெற்ற முகவர்கள்:

சமரசேகர டிரேடிங் லிமிட்டெட், 126, கொழும்பு ரோட், **நீர்கொழும்பு**

ஷீராஸ், ஹோட்டல் ஓரியன்ட் கட்டடம், **மட்டக்களப்பு**

ஜெயமனோ மோட்டர்ஸ்' 4, சென்ட் அண்ரூஸ் ட்ரைவ், **நுவரேலியா**

திரு. மோஹன் குணசேகர. 225, புறோட்வே, **மாத்தறை**

நியு கேரள ஸ்டோர்ஸ், 126, மாத்தறை ரோட், **காலி**

தர்மசிறி அன்ட் சிசிர மோட்டர்ஸ், 117, புத்தளம் ரோட், **குருநாகல்**

எதிரிசிங்க அன்ட் கம்பனி, 40, மத்திய ரோட், **ஹிங்குரக்கொடை**

கே. எச். எம். பெர்ணண்டோ அன்ட் சன்ஸ் லிமிட்., 37, திருகோணமலை வீதி, **கண்டி**

திரு. டபிள்யூ. எம். முதியான்சே, ஜெம்ஸ்டார் மோட்டர்ஸ், **மாத்தளை**

சுவினி கொன்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டெட், 298/2, பதுளை ரோட், **பண்டாரவளை**

டெக்கா ஹாட்வெயர் ஸ்டோர்ஸ், 7, நாவல ரோட், **நுகேகொடை**

ஐடியல் டிரேட் சென்டர், பிரதான வீதி, **அளுத்கம**

சிலோன் மேர்ச்சன்ட்ஸ் லிமிட்டெட், 484, ஆசுபத்திரி வீதி, **யாழ்ப்பாணம்**

காதிக் லிமிட்டெட், 125/3, நாவல ரோட், **கொழும்பு 5**

நியூ தாஜ்மஹால் ஸ்டோர்ஸ், **மன்னார்**

மோட்ரெக் டிரேட்ஸ் அன்ட் சேர்விசஸ், 8, பேங்க் ரோட், **பதுளை**

கலீல் மோட்டர் ஸ்டோர்ஸ், 74, பிரதான வீதி, **இரத்தினபுரி**

அலன் மோட்டர்ஸ், திம்புல்ல ரோட், **ஹட்டன்**

ப. நோ. கூ. ச. **பலாங்கொடை**

டார்ஸன் சிலோன் லிமிட்டெட், ரண்வெல, **கேகாலை**

நெஷனல் என்ஜினியரிங் மோட்டர் வேர்க்ஸ், 251 ஏ, புதிய நகர், **அனுராதபுரம்**

சிலோன் ட்ராக்டர் ஹவுஸ், 5, பிரதான வீதி, **மதவாச்சி**

பெயர்லைன் டிரேட் சென்டர், **கெகிராவ**

ஏக விநியோகத்தர்கள்:

AMW

அசோஸியேட்டட் மோட்டார்வேய்ஸ் லிமிட்.,
185, யூனியன் பிளேஸ், கொழும்பு-2
தொலைபேசி : 33371-8

YAMAHA

**வெலிங்டன்** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] ரவிச்சந்திரன் — விஜயா
**நினைவில் நின்றவள்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30
**FIVE ANGRY WOMEN**
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**ஸ்ரீதர்** தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**
(புதிய பிரதி)

**Rajah** JAFFNA Daily 10—30, 2—00, 4—45, 7—00, 9—30
**SEVEN UPS**
(Color - Scope - Action Film)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ். நகர்) 10—30, 2—30, 4—45 7—00: 9—30
JIM BROWN, JIM KELLY
FRED WILLIAMSON
**Three The Hard Way**
(Action-color-adults)
Awaits HORROR EXPRESS

**WINDSOR** (JAFFNA) Daily 10.30, 2.30, 4.30, 7.00, 9.30
15th and 16th only
The touch, terrific TERENCE and the Big Bud in taeir newest smashing delightful of fun • Laughter
**ODDS AND EVENS**
17th to 19th only
**The Taxi Driver** (Strictly for adults)

**யாழ். றீகல்** தினசரி 10—30, 2—30, 6—15, 9—30 நான்குகாட்சிகள்
காட்சிகள் வழமைபோல் காண்பிக்கப்படும்
**இன்றே பாருங்கள்!**
நிறம் மாறாத பூக்கள் புகழ்
விஜயன்
ராஜேஷ்
சுருளிராஜன்,
மாஸ்டர்
ரவிக்குமார்,
சத்தியகலா,
சுவர்ணலத
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:-
"நீயா" புகழ்
துரை






திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்கு சுதந்திர தினத்தன்று காகிதப்பூ செய்வதில், பன்னவேலை, மாலை தொடுத்தல் முதலியவற்றைப் பழக்கும் வகுப்பை திரு: க. கனகராசா ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் பனைக்கைத்தொழில் வல்லுநர் திரு. சு. பரநிருபசிங்கம் பி. எல் சி.யும் காணப்படுகின்றார்.

## ஓர் இலைமறை காய்

இறப்பு ஒருபொதுவான நியதி இதினின்றும் எவரையும் பாதுகாக்கமுடியாது. அதன்படி இசைமணி நடேசனும் மறையத்தான் வேண்டுமெனினும் இவ்வளவு சீக்கிரம் எல்லாரையும் கலங்க வைத்து மறையத்தான் வேண்டுமா?

இவர் அமரத்துவ மெய்திய தினத்தன்று இவரது இறுதிக் கிரியைகளிற் கலந்து கொண்ட மக்கள் வெள்ளத்தையும் அவர்கள் கலங்கிய கலக்கத்தையும் அவருக்குச் சாத்திய மாலைகளின் எண்ணிக்கையையும் கவனித்தால் அவர் பொது மக்களோடு எவ்வளவு அன்னியோன்னியமாகப் பழகினார் என்பது புலனாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க அதிபர், நீதிபதிகள், உதவி அரசாங்க அதிபர், அதிபர்கள், ஆசிரியர்கள், அவரது மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் இசைவல்லுனர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செய்தார்களென்றால் அவரிடம் மக்களுக்கு ஒரு இழுவைச்சக்தி இருந்த தென்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

இவர் கால்நூற்றாண்டுக்கு முன் தென்மராட்சியிலே ஒரு இசைக்கலை மன்றத்தை அமைத்தார். அத்தோடு சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் ஆசிரியராகவும் பணிபுரிய ஆரம்பித்தார். தென்மராட்சியிலே ஆங்காங்கு இசை விழாக்களை நடாத்தினார். இசைமேதைகளைக் கொண்டு கானமழை பொழிவித்தார்.

அந்தக்காலந் தொடக்கம் இவருக்குப்பக்கபலமாக சங்கீத பூஷணம் சி. விநாசித்தம்பி அவர்கள் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் அவர்கள் இசைப்புலவர் சி. செல்லத்துரை ஆகியோர் ஆதரவு நல்கி வந்தனர்.

தன்னிடம் பயின்ற பலர் இன்று இசைமணிகளாகவும், சங்கீதபூஷணங்களாகவும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆசிரியப்பணி புரியும் தனது மாணவர்களின் முன்னேற்றத்தைக்கண்டு இறும்பூதெய்தியிருந்தார்.

இலங்கை வானொலியில் இவருடைய கச்சேரிகள் நடைபெறுவதும் ரசிகர்கள் இவரது கச்சேரியைத் தவறாது கேட்பதும் வழக்கமாக இருந்தது. திருச்சி இந்திய வானொலியிலும் இவர் கானமழை பொழிந்து இந்திய மக்களின் கரகோஷத்தைப் பெற்றார்.

இசைக்கலை மன்றத்தில் வாய்ப்பாட்டு மாத்திரமன்றி, வயலின், மிருதங்கம், நடனம் போன்ற வகுப்புக்களையும் நடாத்திப் பெரும் பணியாற்றினார். ஆண்டுதோறும் நடைபெறும் சங்கீதப்பரீட்சையில் இவரது மாணவர்கள் தொகையினராகவும் திறமைச்சித்தி பெற்றவர்களாகவும் விளங்கினார்கள் என்றால் அது மிகையாகாது.

கால்நூற்றாண்டுக்கு மேலாக இவர் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் சேவையாற்றிக் கானமழைபொழிந்து அண்மையில் இளைப்பாறியிருந்தார்.

இவரது மறைவு இசைவுலகுக்கு மாத்திரமல்ல தென்மராட்சிக்கே ஈடுசெய்யமுடியாதஅளவிற்குபேரிழப்பாகும்.

அ. ஆறுமுகம்

## இன்றைய பலன்

மாசி மாதம் 3 ம் திகதி
திங்கட்கிழமை
(15—2—82)

மேடம்: பொன்னான சந்திப்பொன்று உங்களைப் பூரிப்படையச் செய்யும், தேடிய உறவு உங்களை நாடியே வரலாம். இளம் பருவத்தினருக்கு இன்று இன்ப பூங்கா பறந்து வரும் கடிதம் உங்களைப் பரவசப் படுத்தும்.

இடபம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும், எதிர்பாராதவிதமாகச் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும், உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும், நிதானம் வேண்டும்.

மிதுனம்: மனம்போல்வாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடமுண்டு, முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

கடகம்: புதிய எண்ணங்கள் மலரும், தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு, பொது மக்களின் தொடர்பு பெருகும், சிலருக்கு இருப்பிட மாறறத்துக்கு இடமுண்டு, பொதுசன தலைமையும் கிடைக்கும்.

சிங்கம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும், புதுத் தொழில்முறைகளில் மனம் நாடும், நீண்ட நாள் பிரயாணத்துக்கும் இடமேற்படலாம், பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரலாம்.

கன்னி: எதிர்பாராத விளைவுகளின்மூலம் செலவுகள் அதிகமாகவும் சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், பிணிக்கு இடம் கொடாதிருக்கவும்.

துலாம்: முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப்போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ள நேரிடும், அமைதி நன்று.

விருச்சிகம்: போதும் என்ற மனத்துடன் நிற்பீர்கள், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, முதியவர் ஒருவரின் அறிவுரை புதிய பாதையை வகுக்கும், குடும்பத்திலும் அன்பு தவழும்.

தனு: எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும், வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும், பூமிப் பிணக்கும் தலைகாட்டசகூடும், உடல் நலத்தைப் பேணிக் கொள்ளவும்.

மகரம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம், கல்வியிலும் நல்ல அபிவிருத்தி தென்படுகிறது, ஆசிரியர்களுக்கு செல்வாக்குப் பெருகும்.

கும்பம்: காரியங்கள் அனைத்திலும் கைகொடுப்பதற்கு வீட்டில் உள்ள அனைவரும் முன்வருவார்கள், இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும், தெய்வவழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

மீனம்: பணம் பல வழிகளிலும் செலவாகும், அந்நிய நண்பர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும், உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர், அவதானம் விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## புதிய இயக்குநர்சபை

[யாழ்ப்பாணம்]

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய இயக்குநர் சபை பதவியேற்றது. இவ்இயக்குநர்சபையின் தலைவராக திரு. சி. கணபதிப்பிள்ளையும், உப தலைவராக திரு. ஆ. க. மாணிக்கமும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

## வரியிறுப்பாளர் முறையீடு

[சுழிபுரம்]

சுழிபுரம் பகுதியில் டெலிவிஷன் படக்காட்சி டிக்கட் விற்பனை செய்து காண்பிப்பதைத் தடைசெய்யுமாறும், சட்ட நடவடிக்கை எடுத்து உடன்நிறுத்துமாறும் சுழிபுரம் கிராம வரியிறுப்பாளர்கள் கிராம அபிவிருத்தி உப அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர். [அ]

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**வெஸ்லி** சுளிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
**நூல்வேலி**

**ஹரன்** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்... ஜெய்சித்ரா நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
**வண்டிக்காரன் மகன்**

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 1 ஸ்ரீ 4000 தொடர் இலக்கம் உள்ள Vauxhall Victor கார் விற்பனைக்குண்டு. அ. கனகசிங்கம், 'அருமை இல்லம்', சுதுமலை வடக்கு, (செல்லத்துரை பாடசாலைக்கு அண்மையில்) மானிப்பாய். 2255

எங்களிடம் அடைவு கடைகளுக்கும் வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்கும் உகந்ததுமான இரும்புப் பெட்டிகள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். இரும்புப் பெட்டி தயாரிப்பாளரும், பழுதுபார்ப்பவர்களும், 'எவர் சில்வர் மாளிகை', நி: 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் 2278

## சேவை

உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள், பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளில் இருந்தால் பாஸ்போட், ரிக்கற், விசா பெற்றுக்கொள்ள அரிய சந்தர்ப்பம். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 2272, C/O, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2272

## பயிற்சி

எலக்றிக்கல் வயரிங் டிப்பிளோமா பயிற்சி 01—03—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2256

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

# அறிவித்தல்

மரணசாதனமின்றி மரணித்த திருநெல்வேலி தெற்கு அம்பலவாணர் இரத்தினசபாபதி என்பவரின் ஆதனங்களும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

இரத்தினசபாபதி கைம்பெண் சிவஞானமணியம்மா, அம்பலவாணர் பாதை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழக்கு இல. தத்துவம் 36 7

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982—ம் ஆண்டு பங்குனி மாதம் 19—ந் திகதி முற்பகல் 9—30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதென ஆக்கப்படாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

த. குலஞானம்,
பதிவாளர்.

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (2216)

# சென். தோமஸ் வெற்றி

(அரியாலை)

கொழும்பு கல்கிசை சென்ற் தோமஸ் கல்லூரிக்கும் யாழ். பரி. யோவான் கல்லூரிக்குமிடையில் கொழும்பு சென்ற் தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் சென்ற் தோமஸ் கல்லூரி இனிங்சாலும் 4 விக்கட்டுகளாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய யாழ். பரி.யோவான் கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியில் விளையாடிய எஸ் டி.ஞானரத்தினம், எஸ். நிர்மலன் ஆகியோர் முறையே 4, 38 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்துவீசிய எஸ். கபறகொட 40 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளைக்கைப்பற்றினார்.

சென்ற் தோமஸ் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் 7 விக்கட்டுகளை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இக்கோஷ்டியில் விளையாடிய அல்கம, இடிப்பிலி ஆகியோர் முறையே 64,50 ஓட்டங்களைப் பெற்றனர். என்.பிரபாகரன் 61 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளைக்கைப்பற்றினார்.

யாழ்.பரி. யோவான் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களை பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய எஸ். விக்னபாலன் 20 ஓட்டங்களைப் பெற்றார். எஸ்.கபறகொட 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

# பஸ்

## திருத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள்

எமது கல்லூரி பஸ்ஸைத் திருத்துவதற்கு மேற்படி பத்திரங்கள் கோரப்படுகின்றன. பஸ்ஸைத் திருத்த விரும்புவோர் பாடசாலை நேரத்தில் பஸ்ஸைப் பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்கள் 1—3—82 பி. ப. 3.00 மணிக்கு முன் கல்லூரி அதிபரிடம் கொடுக்கப்படவேண்டும்.

தலைவர்,
யாழ். மத்திய கல்லூரி
அபிவிருத்திச் சங்கம்,
2279 யாழ்ப்பாணம்.

பின்னுறுதிக் கட்டளைக்கான

# அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய தெல்லிப்பளையைச் சேர்ந்த குலத்துங்கர் பழனியாண்டியின் மரணச்சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

குலத்துங்கர் பழனியாண்டி கைம்பெண் மங்களேஸ்வரி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

— மனுதாரர்

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: ரி/104

எதிர்

1. பழனியாண்டி குலத்துங்கர் சோமேசன்,

(2) பழனியாண்டி குலத்துங்கர் கோகுலன்,

(3) பழனியாண்டி மகள் தெய்வநாயகி, எல்லோரும் (பராயமடையாதவர்கள்) தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

2ம், 3ம் எதிர்வாதிகள் பராயமடையாதவராகையால் தங்கள் வழக்குக் காவலன் 1ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்

— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றகதில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் நாளன்று முற்பகல் 9—00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ. கணேசன்,
பதிவாளர்

1982ஆம் ஆண்டு மாசிமாதம் 12ம் நாளாகிய இன்று தேயிடப்பட்டது.

2283

[சங்கானை]

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு.என். சிவமுத்துலிங்கம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும், முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். ஜெயரத்தினம் யாழ். மாவட்டத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். [க]

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த சின்னத்தம்பி என்னும் மறுபெயருடையயோன் பேர்க்மன்ஸ் என்பவரின் கைம்பெண் மேரி யோசேப்பின தங்கப்பொன், 11, கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணம்.

மரணித்தவர்

டாக்டர் அம்புறோஸ் வால்டர் பேர்க்மன்ஸ், 11, கதீட்ரல் றோட்டு, யாழ்ப்பாணம் தனது

அற்றோணித் தத்துவகாரன் இராசையா சிவசுப்பிரமணியம், திருநெல்வேலி தெற்கு யாழ்ப்பாணம் மூலம்,

மனுதார்

இல. தத்துவம் 3631

எதிர்

கிறிஸ்ரி எதிர்மானசிங்கம், சென்ற் நிக்கலஸ் தேவாலயத்தடி, மிருசுவில்.

எதிர்வாதி

மேலே கண்டிருக்கிற இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு மாசி மாதம் 19-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதென ஆக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

தா. குலஞானம்,
பதிவாளர்.

14—12—81.

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (2215)

# பருத்தித்துறையில் இலவச கண்சிகிச்சை

(புலோலி)

பருத்தித்துறை லயன்ஸ் கழகம், மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி, இலங்கை விழிப்புலன் இழந்தோர் சங்கம் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெறும் இலவச சத்திரசிகிக்சை ('கட்றராக்') முகாம் இம்மாதம் 25ம் திகதி முதல் 28ம் திகதிவரை பிரபல டாக்டர்களால் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

கொழும்பிலிருந்து பருத்தித்துறை வரும் பிரபல கண்வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் தலைமையிலான டாக்டர்கள் குழுவே இச் சிகிச்சை முகாமில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும்.

இம்முகாமில் சிகிச்சை பெறும் கண் நோயாளர்களைத் தெரிவு செய்யும்பணி மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்றுவருகிறது.

இம் முகாமில் சிகிச்சைபெறுவதற்கு தொண்டமனாறு, வல்வெட்டித்துறை நெல்லியடி, கரணவாய், அம்பன் மணற்காடு, குடத்தனை, செம்பியன்பற்று மருதங்கேணி, தாளையடி உடுத்துறை, ஆளியவளை ஆகிய இடங்களிலிருந்து பலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாதம் 20ம் திகதி காலை நாகர்கோவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகாமையிலும் மாலை நாகர்கோவில் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலும் 21ம் திகதி காலை அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையிலும் மாலை திக்கம் சித்திநாயகர் வித்தியாலயத்திற்கு அருகாமையிலும் 22ம் திகதி காலை அச்சுவேலி டாக்டர் சந்திரபாலா வைத்தியசாலையிலும் அன்று காலையிலும், மாலையிலும் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியிலும் கண்நோயாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மேலும் இது பற்றிய தகவல்பெறவிரும்புவோர் பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர் திரு.சி. சிவராசசிங்கம் அல்லது மந்திகை ஆஸ்பத்திரி மாவட்ட வைத்திய அதிகாரியுடனும் தொடர்பு கொள்ளலாம். (இ)

# நூற்றாண்டு விழா

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு மாசி மாதம் 27ம், 28ம் திகதிகளில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை இப்பாடசாலையின் பழையமாணவர்களும் அதிபரும் மேற்கொண்டு வருகின்றனர் இவ் விழாவினைத் தொடர்ந்து நூற்றாண்டு மலர் ஒன்றையும் வெளியிட ஏற்பாடு செய்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

27ம் திகதி விளையாட்டுப் போட்டிகளும், 28ம் திகதி பரிசளிப்பு, கலை நிகழ்ச்சிகளும், விசேட சொற்பொழிவுகளும் இடம்பெறவிருக்கின்றன.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நூற்றாண்டு விழாவில், எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா பொ. இரத்தினம், வட்டாரக் கல்வி அதிகாரி, வடமாநில பிரதம கல்வியதிகாரி, அதிவண யாழ் மறைமாவட்ட முதல்வர், யாழ். பங்குக்குரு வண எல். யோசேப் மண்டைதீவ பங்குக் குரவர், உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர்

## கலை அரங்கம்

பாடசாலைக்கென கலை அரங்கொன்றைக் கட்டுவதற்கு பழையமாணவர்கள் முன்வந்துள்ளதாக அதிபர் திரு எஸ். ஏ. தேவராசா தெரிவித்தார். இதற்கான அத்திபாரக்கல் 10ம் திகதி புதன்கிழமை நாட்டப்பட்டது. இவ் வைபவத்தில் வட்டாரக்கல்வியதிகாரி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
கரவெட்டி.

பதிவு இல: யா/1553

# பதவி வெற்றிடங்கள்

1. பண்டசாலை மேற்பார்வையாளர்
சம்பள அளவுத் திட்டம்:
300 — 15 × 12 + 20 × 3 — 540

2. உள்ளகக் கணக்காய்வாளர்
சம்பள அளவுத் திட்டம்:
350 — 15 × 7 + 20 × 8 — 615

மேற்படி பதவிகளுக்கான தகைமைகள்:

அ. 197[illegible]—05—12 ஆந் திகதிய [illegible]/12[illegible] ஆம் இலக்க இலங்கை அரசாங்க [illegible] பத்திரிகை (அதிவிசேஷ [illegible]) இதனை எப் ப. நோ. [illegible] யிடலாம்.

ஆ. வயது 30 — 50 வருடம்.

இ. சங்கத் தொழிற்பரப்பில் [illegible] உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்களை சங்கத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்

[illegible] தாள் [illegible] ணப்பப்படிவங்களிலேயே, விண்ணப்பங்களை "தலைவர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் 05—03—82 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

கரவெட்டி,
15—02—82

சோ. இராமலிங்கம்
பதில் பொது முகாமையாளர்

2 76

விடத்தற்பளை கொலை வழக்கு:

# மகனுடன் சென்ற தந்தை மறுநாள் இறந்து கிடந்தார்

## இறந்தவரின் மாமன் சாட்சியம்

(சாவகச்சேரி)

''இவ்வழக்கில் எதிரியான சிகதரன், கொலையுண்ட சரவணமுத்துவின் ஒரே மகனுவர். சம்பவதினம் எதிரி வந்து தந்யையுடன் கதைத்த பின் அவரை கூட்டிச்சென்ருர். மகனுடன் சென்ற தகப்பன் திரும்பி வரவில்லை. மறுநாள் காலை தகப்பன் பற்றைக்குள் இறந்துகிடந்தார்.''

விடத்தற்பளை கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மாமன் இளையதம்பி தில்லையம்பலம் (வயது 80) மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 81 அக்டோபா 10ல் விடத்தற்பளை செம்பாவளியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சரவணமுத்துவை அவரது மகன் சிகதரன் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் திருமதி நளினி கணேசமோகன், எஸ். கே. திரவியநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா ஆஜராஞர்.

இளையதம்பி தில்லையம்பலம் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:

''இவ்வழக்கில் கொலையுண்ட வேலுப்பிள்ளை சரவணமுத்து எனக்கு நன்ருகத்தெரியும் அவர்திருமணமானவர். அவருக்கு ஒருமகன் இருக்கிருர் சரவணமுத்துவின் மனைவி பிள்ளைக்கு 5, வயதாயிருக்கும் பொழுது காலமாகிவிட்டார். இந்த எதிரிக்கூண்டில் நிற்பவர்தான் இறந்தவரின் மகன் சிகதரன். இவர்கள் எனது உறவினர்கள்''

### பேத்தியாருடன் வசித்தார்

தாயார் இறந்தபின் இந்த எதிரி பேத்தியாருடன் வசித்து வந்தார் கொலையுண்டவரும் தனியாக வாழ்ந்துவந்தாக. அவர் கமத்தொழில் செய்து வந்தார். இறந்தவர் நிரந்தரமாக ஒரு இடத்தில் தங்கி இருப்பதில்லை இவர் பல இடங்களுக்கும் சென்றுவருவார் சம்பவதினம் எனது வீட்டிலே தான் தங்கியிருந்தார் அவர் புறம்பாக இருந்து சமைத்துச் சாப்பிட்டுவந்தார். சம்பவ தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்து எங்கள் வீட்டிலேயே இருந்துவந்தார் இறந்தவர் எனது வீட்டில் வசித்த காலத்தில் எதிரி இடையிடையே வந்து காலமானவருடன் கதைத்துச் செல்வது வழக்கம் அவர் இந்த எதிரிக்குச் சாப்பாடு கொடுப்பார்.

### இறந்தவர் படுத்திருந்தார்

சம்பவதினம், எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. அன்று இறந்தவர் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு எனது வீட்டில் ஒரு மாமரத்தின் கீழ் படுத்திருந்தார் அப்போது எதிரி 4 மணிபோல் வந்து அவருடன் கதைத்துக்கொண்டிருந்தார் எதிரி சிறிது நேரத்தால் இறந்றவரைக் கூட்டிக்கொண்டு போனுர். மகனேடு போனபின் தகப்பன் எனது வீட்டுக்குவரவில்லை. நானும் அவரைத்தேடவில்லை. நாங்கள் சாப்பிட்டுவிட்டுப்படுத்து விட்டோம்.

### கொலை யென நினைத்தேன்

அவர் வெளியே போனுல் சிலவேளை இரண்டு மூன்று நாட்களின் பின்பும் திருப்பி வருவார். ஆகையால் அவரை நான் தேடவில்லை. மறுநாட் காலை எழுந்து பக்கத்திலேயுள்ள இடத்திற்கு போனேன் இறந்தவர் பற்றைக்குள் விழுந்து கிடந்ததைக் கண்டேன் நான் சமீபமாகச் சென்றுபார்த்தேன். அவருடைய கழுத்தில் முசிறுமொய்த்திருந்தது. இரத்தக் கறையும் கழுத்தில் இருந்தது. உடனே நான் கொலை நடந்திருப்பதாக நினைத்தேன். வீட்டிலிருந்து டறப்பட்டபொழுது உடுத்திருந்த உடையோடு கிடந்தார். நான் அந்த உடுப்பைக்கொண்டுதான் இவரை அவதானித்தேன். நான் உடனடியாகக் கிராம சேவகரிடம் சென்றேன். அவர் பொலிசில் கூறுமாறு சொன்னுர். நான் உடனே பொலிசுக்குச் சென்று முறைப்பாடு கொடுத்தேன் இறந்தவர் எனது உறவினர் எனது சகோதரனின் மகளை இறந்தவர் விவாகஞ் செய்தார். அதனுல் அவர் எனக்கு மருமகன். இறந்தவருக்கும் இந்த எதிரிக்குமிடையே ஏதாவது மனஸ்தாபம் இருந்திருக்குமோ என்பது எனக்குத் தெரியாது. இறந்தவரின் மனைவியின் நகைகள் யாவும் கோர்ட்டிலிருக்கிறது. இந்த நகை சம்பந்தமாக இறந்தவருக்கும் இவ்வெதிரிக்கும் மனஸ்தாபமிருக்குமோ என்று கூட எனக்குத்தெரியாது. இறந்தவரின் மரணவிசாரணையில் நான் அடையாளம் காட்டினேன்.

எதிரியின் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாய சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

## இராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரதியை இறக்கிவிட்டு, இளைஞர்கள் மினிபஸ்ஸில் மண்கும்பான்பக்கம் நோக்கிச் சென்றனராம்.

### சாட்டியில் மினிபஸ்

நேற்று, வேலணை சாட்டி என்ற இடத்தில் அநாதரவாக விடப்பட்டிருந்த மினிபஸ்ஸை கைவிரல் அடையாள நிபுணர் கொழும்பிலிருந்து வரும்வரை முப்படையினரும் பொறுப்பேற்றுக்காவல் புரிந்துவருகின்றனர்.

நேற்று ஜீப்புக்குள் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்த பண்டாவின்சடலம் அதே ஜீப்பில் வைத்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு, பிரேத பரிசோதனைக்காகயாழ். பெரியாஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டது.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. றிச்சாட் விஜயசேகரா, உதவிப்பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினசாசா, உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நெவில் பெர்னுண்டோ ஆகியோர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டனர்.

நேரில் சம்பவத்தைக் கண்டவர்களின் சாட்சியங்களை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (சு)

## தனியார்துறை ஊழியருக்கும் ரூ 107 சம்பள உயர்வு

(கொழும்பு)

கடந்த வரவு—செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 107 ரூபா சம்பள உயர்வு தனியார்துறை ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அதிகமான தனியார் நிறுவனங்கள் அரசாங்க ஊழியர்களுக்கு 107 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது போலவே தங்கள் ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பை வழங்கி வருகின்றன.

தனியார்துறை ஊழியர்களுக்கு வாழ்க்கைச்செலவுப் புள்ளியுடன் எவ்வளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டும் என்பதை தொழில் அமைச்சு மார்ச் மாத இறுதிக்குள் அறிவிக்கும் அதே நேரத்தில் வாழ்க்கைச்செலவு உயர்வு அடிப்படையில் இனி வழங்கப்படும் சம்பள உயர்வுகள் அரசாங்க, தனியார்துறை ஊழியர்களுக்கு ஏல காலத்தில் கிடைக்கக்கூடியதாய் ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

## தீவுப்பகுதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்ததுப்பாக்கிச் சூட்டுக்கு பின்னர், காட்டுத்தீபோல் செய்தி யாழ். குடாநாடெங்கும் பரவியதும் மினிபஸ், வான், லொறி, டாக்ஸிபோக்குவரத்துகள் யாவும் பிற்பகல் நிறுத்தப்பட்டன. வடபிராந்திய போக்குவரத்துசபை பஸ்கள் சேவையிலீடுபட்டபோதிலும், பிரயாணிகள் குறைவாகவே சென்றனர். பெண்கள் பிரயாணத்தை மேற்கொள்ளவில்லை.

## 'முகமில்லாத மனிதர்கள்'

(யாழ்ப்பாணம்)

இலங்கை அவைக்காற்றுக் கழகத்தின் 'முகமிம்லாத மனிதர்கள்' என்ற நாடகம் ஐந்தாவது தடவையாக எதிர் வரும் 20ந் திகதி சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது. பாதல்சர்க்காரின் இந்நாடகத்தை சு, பாலேந்திரா நெறிப்படுத்தியுள்ளார்.

## முடியும் நடக்கிறது

யாழ். பொலிஸ் நிலயத்துக்கு அருகாமையில் வழக்கம்போல பொலிஸார், அதிகாலை நேரத்தில் பல்வேறு பயிற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். 'பரேட்' நடந்து கொண்டிருந்தது.

பயிற்சியின் ஒரு அம்சமாக வீதியில் செல்லும் வாகனங்கள் சோதனைக்குள்ளாகின.

திடீரென ஒரு கார் நிறுத்தப்பட்டபோது கார்ச்சாரதி ''என்னை ஒன்றும் செய்யவேண்டாம்... அவர்கள்தான் இவற்றையெல்லாம் ஏற்றிவிட்டாங்க...'' என்ருராம்.

முதலில், ஒன்றும் புரியாமல் விழித்த பொலிஸார் பின்னர் உஷாராகி காரில் சோதனையிட்டபோது, ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் சேலைகள் அகப்பட்டன!.

ஊடுருவி

## கொமெய்னியின் உடல்நிலை கவலைக்கிடம்

தெஹ்ரான், பெப். 14

சுகவீனமுற்றிருக்கும் ஈரானிய புரட்சித் தலைவர் அயத்தொல்லாகொமெய்னியின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட குழு ஒன்று கொமெய்னியின் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## இன்று தொலைக்காட்சி சேவை ஆரம்பம்

(கொழும்பு)

''ரூபவாஹினி'' தொலைக்காட்சி சேவையை இன்றுமாலை ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன திறந்துவைப்பார் திறந்துவைக்கும் வைபவத்தைத் தொடர்ந்து தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரின் பாட்டும் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ)

கட்டைக்காடு கொலைமுயற்சி வழக்கு:

# 3ம் 7ம் எதிரிகள் கட்டிப்பிடிக்க 1ம் எதிரி வாளால் வெட்டினர்

(சாவகச்சேரி)

மூன்றும் ஏழாம் எதிரிகள் என்னைக்கட்டிப்பிடிக்க முதலாம் எதிரி வாளால் தலையில் வெட்டினுர்.

கட்டைக்காடு கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த சுவக்கின் யோகராசா மேற்கண்டவாறு கூறினுர்.

இவ் வழக்கு சாவகச்சேரி நீதவான் எம் எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கட்டைக்காடு என்னுமிடத்தில் சுவக்கின் யேசுராசா என்பவரை அப்பகுதியைச்சேர்ந்த அ. தங்கத்துரை, ச. சுஸ்மீர், ஜே. கிறிஸ்தோப்பிள்ளை தங்கராசா ஜே. எத்தேவிஸ், ஜே, யேசுராசா, ஜே. அல்பிரட் ஜே. பெர்னுண்டோ ஆகியோர் வாளால் வெட்டிக் கொலை செய்ய முயன்றதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜரானுர். சாட்சி தொடர்ந்து குறிப்பிட்டதாவது;

மூன்று நாட்கள் அறிவில்லாத நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் இருந்தேன் 24 நாட்கள் நான் இவ்வெட்டுக்காயல் சம்பந்தமாக யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன்.

சம்பவதினம் நான் எனது சகோதரி வீட்டிலிருந்தேன். அங்கிருந்து புறப்பட்டு மேற்குப் பக்கமாகச் சென்று தாளையடி செல்லும் வீதியில் போனேன். எனது முதலாளி ஒருவர் வீட்டுக்குச் சமீபமாக எதிரிகள் வந்தார்கள். எதிரிகளில் 3-ம், 7-ம் எதிரிகள் கட்டிப்பிடிக்க 1-ம் எதிரி வெட்டினுர்.

நீதவான் விசாரணையை இம் மாதம் 16-ந் திகதி வரை ஒத்திவைத்தார். (சு)

## இலங்கை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

5-வது பந்திலேயே இலங்கைக்குப் பெருமைத் தேடித் தந்துள்ள இந்த 3 ஓட்ட வெற்றி கிடைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கோஷ்டி 45 ஓவர்களில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 215 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப துடுப்பாடி வீரரான சிதாத் வெற்றிமுனி ஆட்டமிழக்காது கடைசி வரை ஆடி 86 ஓட்டங்களைப் பெற்ருர்.

அடுத்து ஆடிய இங்கிலாந்து கோஷ்டி முதலில் விக்கட்இழப்பின்றி நாற்றுக்குமேற்பட்ட ஓட்டங்களை எடுத்தபோதிலும் இலங்கை வீரர்களின் ஆட்டத்தை சமாளிக்க முடியாது இறுதியில் விக்கட்டுகள் மளமளவெனசரியத் தொடங்கின. 45வது ஓவரின் 5வது பந்தில் கடைசி விக்கட்டை இங்கிலாந்து 212வது ஓட்டத்தில் இழந்தது

சிறந்த வீரர் சிதாத் வெற்றிமுனி, சிறந்த துடுப்பாட்ட வீரரும் அவரே. சிறந்த பந்துவீச்சாளர் அசந்தா டிமெல் சிறந்த பந்து தடுப்பாள்ர் மகேஷ் குணதிலகா நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது தெரிந்ததே

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.